(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 87.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, மே 03, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0040/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்களின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இன்றுள்ளவாறாக இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iii) 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iv) 1999 இலிருந்து இற்றை வரையில் நாடுகளினால் அல்லது நிறுவனங்களினால் கடனாக வழங்கப்பட்ட தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) வட்டி வீதத்தினையும் திருப்பிச் செலுத்தும் கால அளவினையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (வட்டியும் முதலுமாக), இற்றைவரையில் எடுக்கப்பட்ட கடன்களுடனும் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்குறிப்பிட்ட தகவலினை யு.எஸ் டொலர்களிலும் விசேட மீள்பெறல் உரிமை அளவிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0217/ '10

2.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0508/ '10

3.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— மரபார்ந்த கைத்தொழில்கள். சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கிராமியக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் பின்பற்றும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) அதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) கிராமியக் கைத்தொழில்கள் முறைமையைப் பலப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0805/ '10

4.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரெஸ்ஸ வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய மாலிம்பட கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) நூறு மாணவர்களுக்குக் குறைவாகவுள்ள பாடசாலைகளில் மூடுவதற்காக தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0869/ '10

5.

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009ஆம் ஆண்டுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில்,

(i) தேசிய மட்டத்தில் சித்தியெய்திய சதவீதம் யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு மாவட்டத்தினதும் சித்தியெய்திய சதவீதம் தனித்தனியாக யாதென்பதையும்,

(iii) அதிகூடிய சித்தியெய்திய சதவீதத்தை அடைந்த 3 கல்வி வலயங்களும், மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் சித்தியெய்திய சதவீதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் சதவீதத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1008/ '10

6.

கௌரவ (வண.) அத்துரலியே ரதன தேரர்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும் ஏனைய மத நிறுவனங்களினால் நடாத்தப்படும் அறநெறி பாடசாலைகள், ஞாயிற்றுக்கிழமை பாடசாலைகள் அல்லது இவ்வகையிலான வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி நிறுவனங்களை நடாத்துவதற்காக அரசாங்கத்தினால் ஏற்கப்படும் செலவினம் யாதென்பதையும்

ஒவ்வொறு மதங்களுக்கேற்ப வெவ்வெறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1057/ '10

7.

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் சங்குப்பிட்டி வீதியிலிருந்து பூநகரி நெற்புலவு கிராமத்துக்குப் பிரவேசிக்கும் வீதி சிதைவுற்ற நிலையில் உள்ளதென்பதையும்,

(ii) இதன் காரணமாக வயல் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கைகளைக் கொண்ட இந்த அழகிய கிராமத்தின் மக்களுக்கு நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், இந்த சிதைவுற்ற வீதியை துரிதமாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

1061/ '11

8.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய 'பிலிசரு' கருத்திட்டம் எந்த அடிப்படையில் நடமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்த திட்டத்தின் கீழ் கொம்போஸ்ட் பசளை கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக மாத்தளை மாநகர சபைக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரச்சபைக்கும் இடையில் 2009 இல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அந்த உடன்படிக்கையின்படி குறிப்பிட்ட கருத்திட்டத்துக்காக ரூபா 2,750,000/- தொகை மத்திய சுற்றடல் அதிகார சபியினால் மாத்தளை மாநகர சபைக்கு வழங்கப்பட்டுளளது என்பதையும்,

(iii) உடன்படிக்கைக்கமைய 2010, மார்ச் மாதமாகும் போது மேற்படி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் மாத்தளை மாநகர சபியினால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அந்த கருத்திட்டத்துக்கான உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அது சம்பந்தமாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்கூறிய உடன்படிக்கை மீறப்பட்டிருக்கும் போது மாத்தளை மாநகர சபையினால் மீண்டும் அவ்வாறானதோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியுமா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதற்கு அடிப்படையாகக்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1097/ '11

9.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தென் மாகாண சபையினால் 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஒவ்வொரு பட்டதாரியினாலும் பெறப்பட்டுள்ள புள்ளிகள் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(iv) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுள்ளோரின் பெயர்கள் மற்றும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் யாவையென்பதையும்,

(ii) நியமனங்களை வழங்கும்போது முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், மேற்படி மாற்றத்தின் காரணமாக மேற்படி பரீட்சையில் மேல்மட்ட பெறுபேறுகளைப் பெற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0041/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, ஜூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0642/ ’10

11.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இவ்வாண்டினுள் தொழில்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவு செய்யப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தொழில்கள் வழங்கும் வேலைத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0751/ ’10

12.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களின் கீழ் ஆசிரிய இடமாற்ற சபையொன்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரிய இடமாற்றக் கொள்கையொன்று இருந்தது என்பதையும்,

(ii) மேற்படி ஆசிரியர் இடமாற்ற சபையானது, கல்வி அபிவிருத்தி மேலதிக செயலாளரின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவரின் கீழ் இயங்கி வந்தது என்பதையும்,

(iii) தற்போது, ஆசிரியர் இடமாற்றப் பிரிவானது, ஆசிரிய தாபனப் பிரிவின் மேலதிக செயலாளரின் கீழ் இயங்குகின்றது என்பதையும்,

(iv) இதுவரை இது தொடர்பில் பணிப்பாளரொருவர் நியமிக்கப்படவில்லை என்பதையும்,

(v) மத்திய அமைச்சின் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினை நடைமுறைப்படுத்தத் தேவையான உத்தியோகத்தர் கட்டமைப்பு அமைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆசிரியர் இடமாற்ற சபையின் உத்தியோகத்தர் கட்டமைப்பை அமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கான ஒழுங்கான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுமா என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0808/ ’10

13.

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மொரவக கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iii) ஆசிரிய இல்லங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்களையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0872/ '10

14\.
கௌரவ சாந்த பண்டார,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டின் பின்பு எமது நாட்டில் தேசிய மின் வலுத் தொகுதியை வலுவூட்டுவதற்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அவ்வாறாயின் இக் கருத்திட்டங்கள் நீர் மின் வலு நிலையங்கள், அனல் மின் வலு நிலையங்கள், மற்றும் வேறு விதமான மின் வலு நிலையங்கள் எனும் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iii) இக்கருத் திட்டங்களினூடாக தேசிய மின் வலுத் தொகுதிக்கு இது வரை பங்களிப்புச் செய்துள்ள மெகாவொட்களின் அளவு மற்றும் எதிர்காலத்தில் சேர்ப்பதற்கு இலக்காகச் கொண்டிருக்கின்ற மெகாவொட்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக மேலும் விசேட கருத்திட்டங்களை ஆரம்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இந்த ஒவ்வொரு கருத்திட்டமும் தொடர்பான விபரங்கள் சுருக்கமாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1058/ '10

15\.
கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்திலுள்ள வயல்களில் பரவுகின்ற நோயொன்று காரணமாக நெற் செய்கைக்கு பாரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்,

(ii) குறிப்பாக செல்லயாதீவு, செட்டியன் குறிச்சி, ஞானிமடல், குருக்காய் தீவு, சித்தக்குறிச்சி, வாடியடி, அத்தாய், தம்பிராய், செல்விபுரம், ஆலங்கேணி, நல்லூர், காயில்புரம், தியாகம், நிவில், கரியாலை, நாகபட்டுவான், குமுலமுனை, கிரான்ஜி, வேரவில் மற்றும் பொண்ணாவெலி ஆகிய பிரதேசங்களின் நெற் செய்கைக்கு மேற்படி நோயினால் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளனவென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மீளக் குடியேறியுள்ள அப்பிரதேசத்து மக்களால் மேற்படி நோயை கட்டுப்படுத்து வதற்கான கிருமிநாசினிகளை பயன்படுத்துவதற்கு பெருந்தொகையான பணம் செலவிட முடியாதென்பதால் அவர்களது நெற் செய்கையை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ விக்டர் அந்தனீ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"த.மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தானமும் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதேசிய சங்வர்தன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவுடனும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் மற்றும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011, மார்ச்சு மாதம் 09 ஆம் திகதிய 1696/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.07ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழான கட்டளை,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 22 எ ஆம் பிரிவின் கீழ் செஸ்வரி தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2010, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 1686/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.27ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

4.

இலங்கைப் பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

5.

தொல்பொருட்களைப் பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

6.

மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

7.

பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

பஹலகம சிறீ சோமரத்தன நாஹிமி தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

9.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

அனுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி ஸ்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 17.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

கடல்கடந்த ஊழியார்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 22.

கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர்,— விலங்குச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குச் சட்டத்தின் 3, 3அ அ, 11, 26 மற்றும் 34 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 35 ஆம் பிரிவின் கீழ் கால்நடை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.05ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— "1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935 )

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0668/ '10

1.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி, பழங்கள், பலசரக்கு பொருட்கள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களினதும் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பொருட்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(iii) இவற்றை இந்நாட்டினுள் இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) இந்நாட்டில் தரையிறக்கிய போது ஒவ்வொரு உணவுப் பொருளினதும் பெறுமதி யாதென்பதையும்

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0882/ '10

2.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஜுலை 29 ஆம் திகதிய "டெய்லி மிறர்" பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையானது, பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் பற்றிய விடயங்கள் தொடர்புடைய சட்டங்களில் மாற்றத்திற்காகப் போராடும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் போதைப் பொருட்களின் அதீத பாவனை போன்ற சட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதாக தெரிவிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சட்டத்திற்கு மாறான செயற்பாடுகள் குறித்த தகவல்களை தம்மிடம் வைத்திருந்து அவற்றை வெளிப்படுத்தும பத்திரிகைகள் அச்செயற்பாடுகள் குறித்த சான்றுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை விசாரித்தறிவதை உறுதிப்படுத்துவதற்கும்,

(ii) சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்பதையும், சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்க நடைமுறை என்பதையும், அதனை கடுமையான தொனியில் கடிந்துரைத்தலாகாது என்பதையும் பத்திரிகைக்கு அறியத்தருவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) (i) பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான இலங்கை சட்ட ஆணைக்குழுவின் கருத்துக்கள்; மேற்சொன்ன கட்டுரையில்; கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சிபாரிசு செய்யப்பட்ட சட்டத்திலான மாற்றங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சால் முன்வைக்கப்படும் காலக்கெடு என்பன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0903 / ’10

3\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அலுத்கம, தர்கா நகர், தேசிய கல்வியியல் கல்லூரியில் இணைந்த விரிவுரையாளராக கடைமையாற்றுகின்ற திரு எம்.ஆர்.எம் சில்மி இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்ப்பதற்காக 2000/11/05ஆம் திகதியன்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்திருந்தும் களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அவரது பிரத்தியேக ஆவணக் கோப்பு பூரணப்படுத் தப்படாமையினாலும் உரிய விதத்தில் பராமரிக்கப்படாமையினாலும் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு இவருக்கு கிடைக்கவில்லையென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) 82/2000 ஆம் இலக்க 2000/8/24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பதவி உயர்வுக்காக பட்டதாரியான இணைந்த விரிவுரையாளரொருவர் 2000/8/24 ஆம் திகதிக்கு 5 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பதன் தேவையை முதுமாணி பட்டதாரியான (M.A) திரு. சில்மி 2000 /7 /11 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், திரு. சில்மிக்கு மேற்படி பதவி உயர்வு வழங்குவதை மேலும் தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) 2000/12/08 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் திரு. சில்மியை இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்த்து, அப் பதவிக்குரிய சம்பள மட்டத்தின் பிரகாரம் அனைத்து நிலுவைச் சமபளங்களையும் கொடுப்பனவுகளையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0908/ ’10

4\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இராச்சியத்தின் அனுசரனையுடன் காலி கடவத் சதர பிரதேச செயலாளர் பிரிவின் மொரகொட, பிரசேத்தின் “கலீபாபுரம்” எனும் கிராமத்தில் வதிபவர்களுக்ககாக வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்,

(ii) அங்கு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு வீட்டுரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்ட வீடமைப்பு நிதியுதவி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கலிபாபுரம் விடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்திய நிறுவனம் அல்லது அரச சார்பற்ற நிறுவனம் யாதென்பதையும்,

(ii) அதன் மேற்பார்வைப் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்,

(iii) மேற்படி நிறுவனத்தின் அல்லது நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0974/ '10

5\.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 - 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாடு மற்றும் தொழில் துறையின்படி வருடாந்த அடிப்படையில் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்புரிவோர் இலங்கைக்கு ஈட்டிக்கொடுத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வருமானம் மொத்த அரசிறையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்

வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0975/ '10

6\.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றைப் பதிவு செய்ய வேண்டிய அரச நிறுவனம் யாது என்பதையும்,

(ii) இவ்வாறு பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iii) இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வெளநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் அடையாளங் காணப்பட்டிருப்பின் அந்நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்,

(ii) இவ்வாறான முகவர் நிலையங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் பிற்காலத்தில் அடிப்படை நிபந்தனைகளை மீறியதால் பதிவு இரத்து செய்யப்பட்ட அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நாட்டில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர் நிலையங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) இவ்வாறான நிலையங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அதற்குரிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள உப முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?